# யூலை- 05 - புதன்

### தூய அந்தோனி சக்கரியா

### “ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது” தி.பா.34:10

## முதல் வாசகம் தொடக்க நூல் 21 : 5, 8 – 20

அவருடைய மகன் ஈசாக்கு அவருக்கு பிறந்த பொழுது அவருடைய வயதோ நூறு.அப்பொழுது சாரா, ”கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பர்” என்றும் சொன்னார்.மீண்டும் அவர், ”சாரா தம் புதல்வர்களுக்குப் பாலூட்டுவார்” என்று ஆபிரகாமிடம் யாராவது சொல்லியிருப்பார்களா? ஆயினும் இதோ அவருக்கு அவரது முதிர்ந்த வயதில் நான் ஒரு மகனைப் பெற்றெடுத்துள்ளேன்” என்றார்.அந்தக் குழந்தை வளர்ந்து பால் குடியும் மறந்தது. அப்படிப் பால் குடிப்பதை நிறுத்திய நாளன்று ஆபிரகாம் பெரியதொரு விருந்து அளித்தார். கடவுளும் பையனோடு இருந்தார். அவன் வளர்ந்து பாலை நிலத்தில் குடியிருந்தான். அம்பு எய்வதில் வல்லவனானான்.

**பதில்பாடல் :** இந்த ஏழை கூவியழைத்தான் ஆண்டவர்
அவனுக்குச் செவி சாய்த்தார்

## நற்செய்தி : மத்தேயு 8 : 28 – 34

இயேசு அக்கரை சேர்ந்து கதரேனர் வாழ்ந்த பகுதிக்கு வந்தபோது, பேய் பிடித்த இருவர் கல்லறைகளிலிருந்து வெளியேறி அவருக்கு எதிரே வந்துகொண்டிருந்தனர். அவ்வழியே யாரும் போகமுடியாத அளவுக்கு அவர்கள் மிகவும் கொடியவர்களாய் இருந்தார்கள்.அவர்கள், ”இறை மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? குறித்த காலம் வரும்முன்னே எங்களை வதைக்கவா இங்கே வந்தீர்?” என்று கத்தினார்கள். அவர்களிடமிருந்து சற்றுத் தொலையில் பன்றிகள் பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன.பேய்கள் அவரிடம் , ”நீர் எங்களை ஓட்டுவதாயிருந்தால் அப்பன்றிக் கூட்டத்திற்குள் எங்களை அனுப்பும்” என்று வேண்டின.அவர் அவற்றிடம், ”போங்கள்” என்றார். அவை வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. உடனே அக்கூட்டம் முழுவதும் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து நீரில் வீழ்ந்து மடிந்தது.பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிப்போனார்கள். அவர்கள் நகருக்குள் சென்று, பேய் பிடித்தவர்களைப் பற்றிய செய்தியையும், நடந்த அனைத்தையுமே அறிவித்தார்கள்.உடனே நகரினர் அனைவரும் இயேசுவுக்கு எதிர்கொண்டு வந்து, அவரைக் கண்டு தங்கள் பகுதியை விட்டு அகலுமாறு வேண்டிக்கொண்டனர்.

**தியானம்:** இன்றைய நாளுக்கான இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை இறைவனுடைய வார்த்தையில் நம்பிக்கை கொண்டு வாழவும், அதேவேளையில் கடவுளின் சாயலாக படைக்கப்பட்ட மனிதர்களாகிய எம்மை இருளின் சக்திகள் ஆக்கிரமிப்பு செய்வதை இறைவன் விரும்பவில்லை என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளன. நற்செய்தியில் இயேசுவைக் கண்டு அசுத்த ஆவிகள் நடுங்கின, இன்று அசுத்த ஆவிகள் மனித உள்ளங்களில் எழும் அகங்காரம், பொறாமை, கர்வம் போன்ற வடிவங்களால் வெளிப்படுகின்றன. நன்மையும், தீமையும் ஒன்றாக வாழமுடியாது. இறைமகன் இயேசு தீய சக்திகளை மனிதனிடத்தில் இருப்பதை விரும்பாதவர். தீமையை விலக்கி மக்களுக்கு விடுதலையைக் கொண்டு வந்தவர். கல்வாரி சிலுவையில் கள்வனின் வேண்டுதல் கேட்கப்பட்டது போல் கல்லறைப்பேயின் வேண்டுதலும் கேட்கப்பட்டது. நாம் பாவிகளாக இருந்த போதிலும் நம்முடைய வேண்டுதல்கள் நன்நோக்கம் கொண்டவைகளாக இருந்தால் அவை இறைவனால் கேட்கப்படும் என்பதற்கு இது சான்றாகும். எனவேதான் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாங்கள் தீயோனுக்கும் அதன் செயல்பாடுகளுக்கும் அடிமையாகாமல் கடவுளின் தூய ஆலயங்களாக வாழ இறைவனின் அருளை வேண்டுவோம். ஆண்டவர் எல்லோருக்கும் நன்மை செய்பவர் தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இர்க்கம் காட்டுபவர் (திரு.பா.145:9)